# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## STC. No.107/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சண்முகநாதன் | த-பெ | சோமசுந்தரம் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 50/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம், | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **30.03.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை</u>

நான் தற்சமயம் காரைக்குடி விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கிருஷ்ணன் என்பவரை எனக்கு தெரியாது. விபத்து சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. யாருக்கு விபத்து ஏற்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. யார் விபத்தை ஏற்படுத்தினார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 11.01.2020 அன்று மாலை 6.00 மணியளவில் இருசக்கர வானத்தில் தென் திருப்பதி நகர் அருகே சென்று கொண்டிருந்த போது கிருஷ்ணன் என்பவர் தன்னுடைய இருசக்கர வாகனத்தில் கிழக்கில் இருந்து மேற்காக சென்று கொண்டிருந்ததாகவும், ஆஜர் எதிரியானவர் தன்னுடைய இருசக்கர வாகனமான அப்பாச்சி TN 63 BY 1675 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதாயகவும் ஓட்டி சென்று கிருஷ்ணன் என்பவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், சம்பவத்தை நேரடியாக பார்த்தாகவும், கிருஷ்ணன் என்பவருக்கு தலை, கை, கால் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டு ஆட்டோ ஒன்றின் உதவியுடன் அவரை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்த விவரத்தை தெரிந்து கொண்டு தற்போது உண்மை சம்பவங்களை மறைத்து பிறழ் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.01 10:40:35 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
STC. No.107/2022 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜேந்திரன் | த-பெ | ராமசாமி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 63/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை. | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.03.2026

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.3**. தேதி மாதம் நினைவில்லை ஒரு வருடத்திற்கு முன்பு நான் தேன் திருப்பதி அருகே சென்று கொண்டிருந்த போது கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். போலீசார் அங்கு இருந்தார்கள் ஏற்கனவே நடந்த சாலை விபத்து குறித்து விசாரணை செய்தார்கள். அங்கு போலீசார் தயார் செய்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டதின் பேரில் நான் கையொப்பம் செய்தேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.01 10:40:42 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.